**தலைப்பு 193 – தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 193 – தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 22 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 260.75 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 237.07 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 23.68 மில்லியன் அதாவது 9.09 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 215.56 | 202.63 | 12.93 | 6.00 |
| மூலதனம் | 45.19 | 34.44 | 10.75 | 23.79 |
| மொத்தம் | 260.75 | 237.07 | 23.68 | 9.09 |

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 19301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.00 | 1.26 | 0.20 | 0.63 | 35.00 | 15.36 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 12,593 ஆக இருந்ததுடன் அது 2016 பெப்ரவரி 01 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19.36 மில்லியனாக இருந்ததுடன் வரவு மீதி ரூபா 4.99 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0012/0080/000 | (4.99) |
| 6000/0000/00/0016/0095/000 | 0.11 |
| 6000/0000/00/0017/0026/000 | 19.24 |
| 6000/0000/00/0018/0098/000 | 0.01 |
| மொத்தம் | 14.37 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அமைச்சினால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனி, கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 3 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 76 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களின் தேறிய நிதிஏற்பாட்டில் 05 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவைதருநரால் இடர்களுக்கு உட்படுகின்றவர்களுக்கு செலுத்துவதற்காக இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 19 மில்லியன் தொகை 5 வருடங்கள் அளவிலான காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நீதி அமைச்சிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சு புதிய அமைச்சாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சின் செலவினத்திற்காக 2015 ஏப்ரல் 21 ஆந் திகதி எதிர்பாராத சந்தர்ப்ப நிதியத்திலிருந்து ரூபா 5 மில்லியன் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அம் முற்பணம் நிதிப்பிரமாணம் 487 இன் பிரகாரம் அமைச்சினால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும் அக்காலப்பகுதியில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் நிதிப்பிரமாணம் 206 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதனால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வைப்புக் கணக்கில் ரூபா 4.99 மில்லியன் வரவு மீதியொன்று காணப்பட்டது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

19301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற

உத்தியோகத்தர்களிடமிருந்து 2 வருடங்கள் முதல் 3 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 177,274 தொகையான நிலுவைக் கடன் மீதியும், வேலையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 3 வருடங்கள் முதல் 4 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 138,501 தொகையான கடன் மீதிகளையும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சினால் நீதி அமைச்சிற்கு வழங்கப்பட்ட இரண்டு வாகனங்கள் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் மீண்டும் தொழில் அமைச்சிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 138 | 1,387,556 | 56 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 137 | 151,880 | வாகனம் பழுதுபார்த்தலின் பின்னர் அந்த பழுதுபார்த்தல் சரியாக மேற்கொள்ளப்பட்டமைக்கு பொறியியலாளர் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. |

(iii) நிதிப்பிரமாணம் 1646 - அமைச்சின் குழாம் வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை

2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி - ஒதுக்கப்பட்ட வாகனத்திற்காக எரிபொருள் படி செலுத்தப்பட்ட போதும், தொழில் இழப்பீட்டு ஆணையாளர், இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு புறம்பாக நிறைவேற்றப்பட்ட கடமைகளுக்காக மைல் கூலி பெறப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை

2,8(அ), 5.6.1 (ஆ) வழிகாட்டி - முறையான மாதிரி மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரமின்றி 2 கணனி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.7 செயலாற்றல்

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) அமைச்சின் வினைத்திறன் இயலளவை அதிகரிப்பதற்காக 4 பகுதிகளின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட அலுவலகங்களிலிருந்து 20 சதவீதம் முதல் 45 சதவீதம் வரையிலான வீச்சளவில் அப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ii) இலத்திரனியல் ஊடாக அரச கொள்கைகளை அமுல்படுத்துவதன் கீழ் திட்டமிடப்பட்ட 6 செயற்பாடுகளில் ஆண்டின் இறுதியளவில் அந்த இலக்கில் 20 சதவீதமான அளவு அடையப்பட்டிருந்ததுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் 70 சதவீத இலக்கை நிறைவேற்றியிருந்தது.

(iii) ஆராய்ச்சி, மெய்மையாய்வு மற்றும் வெளியீடுகளின் கீழ் திட்டமிடல் செயற்பாடுகளிலிருந்து தொழில் சட்டங்களைப் பாதுகாப்பதற்கான வெளியீடுகளைத் தயாரித்தல் 55 சதவீத அளவில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(iv) தொழில் மற்றும் வெளிநாட்டு தொடர்புகளின் கீழ் திட்டமிடப்பட்ட 4 செயற்பாடுகளில் 2 செயற்பாடுகள் பூரணமாக அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் 2 விடயங்களில் முறையே 50 சதவீதம் மற்றும் 70 சதவீதமாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

**3.8 நட்டமும் இழப்பும்**

-----------------------------------

2015 ஆம் ஆண்டில் திடீர் விபத்திற்குள்ளாகிய அமைச்சிற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்றிற்கு ஏற்பட்ட இழப்புத் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நட்ட இழப்புக்கள் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புத் தொடர்பான பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 முகாமைத்துவ நலிவுகள்**

--------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இடர்களுக்கு அல்லது மரணத்திற்குள்ளாகின்ற ஊழியர்களுக்காக தொழில்தருநர்களிடமிருந்து தாமதமின்றி இழப்பீட்டுப் பணத்தை அறவிட்டு வழங்குவதன் மூலம் ஊழியர் திருப்தியை ஏற்படுத்தும் நோக்குடன் தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அவ்வலுவலகத்தினால் அறவிடப்பட்ட ரூபா 55,886,848 இழப்பீட்டுப் பணத்தை உரித்தாளிகளுக்கு வழங்குவதற்கு 14 நாட்கள் முதல் 1,634 நாட்களுக்கிடையேயான காலவீச்சில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2015 செப்தெம்பர் 31 ஆந் திகதியளவில் தொழில்தருனர்களினால் உரிய நலனாளிகளுக்கு இழப்பீடு பெற்றுக்கொடுப்பதற்காக பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அத் திகதி வரையில் தொழில்தருனர்களிடமிருந்து 3 மாதம் முதல் 6 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கிடைத்த ரூபா 15,192,313 தொகையான இழப்பீட்டுப் பணம் உரிய நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் வயதைப் பூர்த்தி செய்த 531 நலனாளிகளுக்குரிய ரூபா 24,071,183 தொகைக்கான சேமிப்பு பாஸ் புத்தகம் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்டதுடன் அப் பணத்தை விடுவிப்பதற்கான தாமதக் காலம் 01 வருடம் முதல் 20 வருடங்கள் வரையிலான கால வீச்சுக்குரியதாக இருந்தது.

(ஈ) விபத்திற்குள்ளாகி 12 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய அமைச்சிற்குரிய மோட்டார் வாகனமொன்றை பழுதுபார்ப்பதற்கு பாரியளவிலான கிரயமொன்றைச் செலவிடுவதற்கு ஏற்பட்டமையால் காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு இணங்கியிருந்த ரூபா 1,200,000 தொகை காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரச – தனியார் கம்பனியொன்றாக அமுல்ப்படுத்தப்பட்ட ‘‘தொழில் இல்லம்’’ ஊடாக நிறைவேற்றப்பட்ட பணிகள் வேலைவாய்ப்பு மற்றும் மனிதவலுத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற போதும் ‘‘தொழில் இல்லம்’’ கலைத்தல் கணக்கில் தீர்ப்பதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 12 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 71 | 54 | 17 |
| (iii) | இரண்டாம் நிலை | 05 | 04 | 01 |
| (iv) | ஆரம்ப நிலை | 31 | 26 | 05 |
| | மொத்தம் | 121 | 96 | 25 |

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட 5 ஊழியர்களுக்காக ரூபா 2,310,339 தொகை செலவிடப்பட்டிருந்தது.